# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

## நகர் ஊரமைப்புத்துறை
## மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம்,
## மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி,
## உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொ)அவர்களின் செயல்முறை ஆணை
## பிறப்பிப்பவர்- திரு.அ.விஜயன், பி.இ.,

ந.க.எண். 5102/2021/மதி2.

நாள்- 04.03.2022.

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் - மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம்/ஊராட்சி ஒன்றியம், யா.ஒத்தக்கடை ஊராட்சி, இராஜகம்பீரம் கிராமம், ரீசர்வே எண்கள்-.83/6, 85/1B -ல் 1.69ஏக்கர் (6850ச.மீ) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் /திட்ட அனுமதி - வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1) மனுதாரர் திரு.K.விஜய் ஆனந்த், மதுரை அவர்களின் விண்ணப்பம் கடிதம் மற்றும் இணைப்புகள் பெறப்பட்ட நாள். 20.12.2021 (Online Application No. 20210070107708, Date.15.12.2021)
2) உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் கடிதம் ந.க.எண். 5102/2021/மதி2, நாள். 21.01.2022 மற்றும் 22.02.2022.
3) அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-31.01.2020.
4) மதுரை உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண்.130/2020, நாள்.29.09.2020 மற்றும் 49/2021, நாள்.04.09.2021
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-4367/2017பிஏ-2, நாள்-06.11.2019 மற்றும் 05.02.2020, 14.08.2021.
6) அரசு கடிதம் எண்.19113/நவ 4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்.30.08.2017.
7) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-13686/2017எல்ஏ-2, நாள்-08.09.2017.
8) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-12120/2017சிபி, நாள்-28.09.2017.
9) உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் உள்ளாட்சி பொது உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானபத்திர ஆவண எண். 801/2022 நாள். 07.02.2022.
10) மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கு TANGEDCO உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. ஆவண எண். 802/2022 நாள். 07.02.2022.
11) மனுதாரர் திரு.K.விஜய் ஆனந்த், மதுரை அவர்களின் இருந்து தானப்பத்திர அசல் ஆவணங்கள் பெறப்பட்ட நாள். 11.02.2022.
12) மனுதாரர் திரு.K.விஜய் ஆனந்த், மதுரை அவர்களின கடிதம் மற்றும் கட்டணங்கள் செலுத்தப்பட்டு இணைப்புகள் பெறப்பட்ட நாள். 01.03.2022.

13) அரசு கடிதம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை-09, அவர்களின் கடிதம் எண்.8449/நவ4(3)/2020-2, நாள்.-23.09.2020.

14) நகர் ஊரமைப்பு இயக்குநர்(மு.கூ.,பொ) சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-7671/2020/T(2),நாள்-25.09.2020.

15) அரசாணை எண்-181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்-09.12.2020.

16) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-19799/2020/போ நாள்-18.12.2020 மற்றும் 24.12.2020 மற்றும் 08.02.2021

*******

**உத்தரவு**

பார்வை 1 -ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுலக கடிதம் நாள். 21.01.2022 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 09-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர ஆவணம் எண். 801/2022, நாள். 07.02.2022-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ம.உ_.தி.கு.எண்.52/2022** என எண்ணிடப்பட்டு. தொழில்நுட்ப அனுமதியும், மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் பிரிவு 49-ன்கீழ் மற்றும் பார்வை (3)-ல் கண்ட அரசாணையின், விதி(4)-ன்படியும் **திட்ட அனுமதி எண்.54/2022** என எண்ணிடப்பட்டு, 4 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்:9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. (a) பார்வை 15-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 3-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

(b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm drains water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 06 மற்றும் 07-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில்; உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்படி சிறப்பு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**இணைப்பு**

1) அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்கள் - 2
மனைப்பிரிவு நிபந்தனைகள் - 1

2) அசல் தானப்பத்திர ஆவணம் எண். 801/2022, நாள். 07.02.2022 (16 தாள்கள்)

உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

பெறுநர்

ஊராட்சி தலைவர்,
யா.ஒத்தக்கடை ஊராட்சி,
மதுரை மாவட்டம்.

நகல்

1. திரு.K.விஜய் ஆனந்த்,
த/பெ திரு.R.கிருஷ்ணன்,
பிளாட் எண்.600, மகரிஷி ஸ்கூல் சாலை,
கே.கே.நகர், மதுரை - 625020.

2. தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை
ஒழுங்குமுறை குழுமம், **(TNRERA)**
IA, முதல் தளம், காந்தி இர்வின் பிரிட்ஜ் சாலை,
எழும்பூர். சென்னை -600008.

3. உதவி இயக்குநர்,
நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
மதுரை மாவட்டம்.

4. வட்டாச்சியர்,
Tamil Nadu Nilam and Collabland Software,
மதுரை கிழக்கு வட்டம்,
மதுரை மாவட்டம்.

5. தொழில்நுட்ப வைப்பறைக்கு - வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் -1

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், ஒத்தக்கடை ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை:திருமதி.S.முருகேஸ்வரி சரவணன்

ந.க.எண்: 6/2021-2022

நாள்: 08.03.2021

**பொருள்:** மதுரை மாவட்டம் – மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் - ஒத்தக்கடை ஊராட்சி இராஜகம்பீரம் கிராமம் சா்வே எண்கள் 83/6, 85/1B -ல் 1.69 ஏக்கா் (6850 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவு ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வடிவமைப்பிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியது – மனைப்பிரிவுக்கு உத்தரவிடுதல் - சார்பு.

**பார்வை:** 1)அரசாணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகா்புற வளா்ச்சித்துறை நாள்:04.05.2017 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.125, பாகம் -III பிரிவு 1(a), நாள்:04.05.2017

2)அரசாணை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகா்புற வளா்ச்சித்துறை நாள்:13.10.2017

3)உறுப்பினா் செயலா்(பொ), மதுரை உள்ளூா் திட்டக் குழுமம், மாநகராட்சி அலுவலக வளாகம் ,அண்ணாமாளிகை அவா்களின் நடவடிக்கைகள் ந.க.எண்:5102/2021/மதி2, நாள்:04.03.2022

4)திரு.K.விஜய் ஆனந்த் அவா்களின் விண்ணப்பம் நாள்:08.03.2022

உத்தரவு:-

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஒத்தக்கடை ஊராட்சி - இராஜகம்பீரம் கிராமம் சா்வே எண்கள்: 83/6, 85/1B ல் 1.69 ஏக்கா் (6850 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவு மற்றும் திட்ட அனுமதி வடிவமைப்பிற்கு கொள்கையளவிலான மனைப்பிரிவு வரைபடத்திற்கு (in principally accepted layout frame) ம.வ./ம.உ.தி.கு எண்: 52/2022 என எண்ணிட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் திரு K.விஜய் ஆனந்த் என்பவருக்கு பார்வை-3ல் காணும் கடிதம் மூலம் உள்ளூா் திட்டக்குழுமம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

வளா்ச்சிக்கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் செலுத்தப்பட்ட பின்னரே இம்மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவுகளுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என பார்வை 3ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பார்வை 3-ல் காணும் கடிதத்துடன் கீழ்க்காணும் விபரப்படி வளர்ச்சிக்கட்டணம் செலுத்தப்பட்டதற்கான செலுத்துச்சீட்டு இணைத்து வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | கட்டண விபரம் / இடத்தின் மொத்த அளவு(ச.மீ) | ஒரு சதுர மீட்டருக்கு ரூ. | செலுத்த வேண்டிய தொகை ரூ. | செலுத்தப்பட்ட தொகை ரூ. | தொகை செலுத்தப்பட்ட சலான் எண் மற்றும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | மனைப்பிரிவு மேம்பாட்டு கட்டணம் 4506.85 ச.மீ | 25 | 112675 | 112675 | 20349/08.03.2022 |

மேற்கண்டவாறு மேம்பாட்டுக்கட்டணம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது. (1 முதல் 37 வரையிலான மனைப்பிரிவுகளுக்கு மட்டும்)

உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் விபரப் பட்டியல்

1.சாலை மொத்த பரப்பு = 2343.15 ச.மீ

2.பூங்காவிற்காக அரசு மதிப்பீட்டு கட்டணம் = ரூ.2,57,000/-
(வங்கி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.
துறை அலுவலரின் குறியீடு எண்:TE203
தகவல் தொகுப்புக் குறியீடு எண்:
0217-60-800-AM-24501

3.மின்சார வாரியம் =31.26 ச.மீ

4.உள்ளாட்சி அமைப்பு =29.99 ச.மீ

**நிபந்தனைகள்**

1.இம்மனைப்பிரிவில் அமையும் பூங்காவிற்கான கட்டணம் அரசாங்க உத்தரவின்படி பணமாக செலுத்தப்பட்டுள்ளது.

2.நிலஉரிமம் குறித்துறுதி செய்யும் பொறுப்பு உள்ளாட்சியையே சார்ந்ததாகும்.

3.கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை.கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நில உரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின் படி மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது.சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம், நில உரிமை

குறித்து முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை மற்றும் உள்ளாட்சித் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

4.இந்த மனைப்பரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும் ,நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்பு சட்டம் மற்றும் நில சீர்திருத்த சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

5.இந்த வரன்முறை மனைப்பிரிவுகளுக்கு மட்டுமே பொருந்தும், மனையில் அமையும் கட்டிடத்திற்கு வரன்முறையாகக் கருதப்பட மாட்டாது.

6.உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளாட்சி அமைப்பு ஒப்புதலின்றி மாற்றம் செய்யக்கூடாது.

7.நகர் ஊரமைப்புத் துறை கொள்கை அளவிலான (in principle)ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை,அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறையோ உள்ளாட்சி துறையோ பொருத்தமான அமைப்பு அல்ல.

தலைவர்
ஒத்தக்கடை ஊராட்சி

பெறுநர்:

திரு K.விஜய் ஆனந்த்,
த/பெ R.கிருஷ்ணன்,
பிளாட் எண்.600,மகரிஷி ஸ்கூல் சாலை,
கே.கே நகர்,
மதுரை-625 020.

நகல்:

உயர்திரு.வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள்(கி.ஊ).,
மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம்,
மதுரை.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate